
# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 29

(உறுப்பினர்களுக்கு மட்டும்)
பண்பாட்டுக்கழகம் - பதிவு - 125/83



இலங்கையர்கோன் இராவணன் மகளான
சீதா ராமனின் முடிசூட்டு விழா

உள்ளே:- சித்தர் ராமாயணம் கூறும் இராமனின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பின் தொகுப்பினை படித்துணரவும்.

வெளியீடு: 26—5—86

காணிக்கை: ரூ 1-00

# நமது தாயகம் — 2

## நிறுவன நிர்வாகக்குழு

இவற்றால்தான், நமது தாயகத்துக்கு அன்னியர்களே தலைவர்களாக, முதலாளிகளாக, வழிகாட்டிகளாக, பொழுதுபோக்குக் கலைஞர்களாக, வணிகர்களாக, குருமார்களாக, ஆச்சரியார்களாக, குருக்கள்களாக(பூசாரிகளாக) ஆட்சியுலக அதிகாரிகளாக......... இருந்து வருகிறார்கள். நம் தாயக மக்களும் உண்மையான தன்மான உணர்வும், உயிரோட்டமான தன்னம்பிக்கையுணர்வும் இறவாமை பெற்று இனப்பற்றுமிகு ஒற்றுமையுணர்வும், மறவாமையுற்ற மொழிப்பற்றுமிகு பெருமிதஉணர்வும் கட்டுக் கோப்புமிகு நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்புக்குட்பட்ட கட்டுப்பாட்டுணர்வும் முளைத்துக் கிளைத்துச் செழித்துவளர முடியாத அளவு கூலியுணர்வும் அடங்கியொடுங்கி வாழும் அடிமையுணர்வும், ஏழ்மையுணர்வும், கோழையுணர்வும்....... பல வடிவங்களில் தங்களால் தங்களுக்குள்ளேயே அப்பாவியான வாழ்க்கை வாழுகிறார்கள்.

இந்துமதத்தின் மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள்; நேம நியம நிடதங்கள் சுருதி ஆரண, ஆகம, மீமாம்சைகள்; அத்திர, சாத்திர, சூத்திர, தோத்திர நேத்திரங்கள் மந்திர, மந்திர மந்தர, மாந்தர, மாந்தரீகங்கள்; தந்திர, தந்திர, தந்தர தாந்தர, தாந்தரீகங்கள், எந்திர, எந்திர, எந்தர, எந்தர, ஏந்தரீகங்கள், ஓத, சித்த போத, மோத, நாதங்கள், ஈக, ஊக ஏக, தாக, யோக, மோக, வேகங்கள், ஓமம் ஓகம், யாகம் யக்ஞம் வேள்விகள்........ புராண இதிகாசங்கள், அருட்பாக்கள் தத்துவப்பாக்கள், சித்தாந்தப் பாக்கள், பாசுரங்கள், மாலைகள், எள்ளல்கள், ஏசல்கள் அழுகைகள், அரற்றல்கள், புலம்பல்கள், தொழுகைகள், பூசைகள் வேண்டல்கள் கும்பிடுகள், மாடுகிடத்தல்கள், தவமொழிகள், பூசாவிதிகள், கருவறைப்படிகள், குருமார் ஒழுக்கம், குருபாணி, கருவாக்குகள், கருவாக்கியங்கள், கருவாசகங்கள் குருவாக்குகள், குருவாக்கியங்கள், குருபாரம்பரியங்கள், குருவாசகங்கள், தருவாக்குகள், தருவாக்கியங்கள், தருவாசகங்கள், திருவாக்குகள், திருவாக்கியங்கள், திருவாசகங்கள், அருள்வாக்குகள், அருள்வாக்கியங்கள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாக்கியங்கள், மருள்வாசகங்கள், இலக்கிய பாரம்பரியங்கள் அரசபாரம்பரியங்கள், சித்தர் பாடல்கள் ஞானப்பாடல்கள், கதைகள், காதைகள், கவிதைகள் (காவியங்கள் — காப்பியங்கள்), கீதைகள், ஓசைகள், வீச்சுகள் நூல்களைத்தமிழில் பெயரைக்கூடப் பலரும் தெரிந்துகொள்ள இயலாத அளவு மறைக்கப்பட்டு மறக்கடிக்கப்பட்ட அருளுலக இலக்கியங்களே மெய்யான இந்து மதத்தை விளக்குவன. இவற்றை வளர்க்கவேண்டுமென்றால் அன்றாடம் காலை மாலை 2-30 மணி நேரம் - ஒரு சாமம் இத்தாயகத்துச் சிறுவர்களும், இளைஞர்களும் பாடம் கேட்டு ஓதி உணரவேண்டும். அதற்குரிய தமிழ் வேத, சித்த வேத, இந்து வேதப் பாடசாலைகள் துவக்கப்பட்டேயாக வேண்டும். ஆனால் பதினெண் சித்தர்கள், சித்தர்கள், தமிழ் மொழி, இந்து என்ற சொல்லின் பொருள் இந்துமத உண்மை வரலாறு, இந்துமதமும் உலக மதங்களும் பற்றிய பேருண்மைகள் ..... முதலியவைகளைத் தெரியாத இந்துமதத் துறவிகள், சாமியார்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், மதத்தலைவர்கள், மதத் தொண்டர்கள், மதச் சொற்பொழிவாளர்கள், அருளாளர்கள்......... முதலியோரே கடந்த சில நூற்றாண்டுகளாக அல்லது சில நூற்றாண்டுகளாக இத்திருநாட்டில் உலா வருகிறார்கள்; மதப்பணி ஆற்றுகிறார்கள்.

—தொடரும்

---

தொடர்பு;- தலைமைப்பொறுப்பகம், ஸ்ரீ கவிக்குமார் B.Sc,
தலைமைப்பொறுப்பாளர், 56 N G O காலனி, பொன்னேரி-601 204.

# சித்தர் இராமாயணம்

## (யக்ஞவல்லியின் இராமாயணம் மெய்யான இராமன் வரலாறு)

திரேதகாயுகத்தில் சூரிய குலத்தைச் சார்ந்த மன்னர்களும், மகான்களும் ஞானியர்களும், முனிவர்களும், மாவீரர்களும், அருளாளர்களும், கொடைவள்ளல் களும் எண்ணற்றுத் திகழ்ந்தனர். அதாவது 12,90,000 ஆண்டுகளுக்குரிய மிகப் பெரிய இடைவெளியில் ஆயிரமாயிரம் அரசர்களும் கணக்கற்ற போர்களும் நிகழ்ந் திருக்கின்றன. ஆனால் அயோத்தி மன்னன் தசரதனின் மகன் இராமன் நிகழ்த்திய இராவணப் போரும [18 மாதங்கள்], இவனது மகன்கள் இலவகுசர்கள் இவனைத் தங்களுடைய தந்தை என்றும் பாராமல் இருவரும் தொடர்ந்து 48மாதங்கள் நிகழ்த்திய போரும் இறவாத இலக்கியச் சிறப்பையும் வாழ்வையும் பெற்றுவிட்டன இவர்கள் காலத்திலே வாழ்ந்த சூரிய குலத்து குரு ‘சூரியனார்’ எனப்படும் யக்ஞவல்லி அருளுல கில் சிறந்து மாந்தரீக வல்லியாக, தாந்தரீகச் சித்தியாளராக, யக்ஞவல்லியாக யோகீசுவராக விளங்கிப் பரந்துபட்ட அரச குடும்பங்கள், செல்வர்கள், அருளாளர்கள் ...... முதலிய அனைவருக்கும் தலைவராக, வழியாக, வழிகாட்டியாக வழித்துணையாக விளங்கினார் அப்படிப்பட்ட அவரை தன்னோடு தொடர்புகொண்டிருந்த பதினெட்டு வால்மீகிகளையும், பதினெட்டு கம்பர்களையும், 27 வண்ணங்களில் இராமாயணத்தை இலக்கியங்களாகப் படைத்தார், வாழையடி வாழையாக நாரதர், பிறமண், ஆதிகவி வால்மீகிகள், கம்பர்கள் காளிதாசன், துளசிதாசா, வாத்சாயனர், புத்தர், மகாவீரர் நாயனார்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், பல மொழியினர் இந்த இராமாயணத் தை மீண்டும் மீண்டும் தங்கள் ஆர்வத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்ப புதியபுதிய இலக்கியங்களாக எழுதி மகிழும்படிச் செய்தார் ஆனால் இவர் இராமாயண காலத்தில் வாழ்ந்த அனைவர் பற்றியும், சிறப்புமிக்க நிகழ்ச்சி பற்றியும் எழுதிச் சென்றிட்டக் குறிப்புக்கள் தனித்து நின்றுவிட்டன.

எனவேதான், மெய்யான இராமன் வரலாறும், திரேதகாயுகத்தின் நாயகர் நாயகிகளின் வரலாறுகள் மிகுந்த கற்பனையும், கனவுப்போக்கும், கதைநோக்கும் இலக்கியப் பண்பும் மிகுந்தவைகளாகிவிட்டன. அதனால்தான், பதினெண் சித்தர் பீடாதிபதிகள் திரேதகாயுகத்தின் கதாநாயகனை, அருளுலக ஆசானை, அறிவுலகப் பேரரசனை ஒப்பாரும் மிக்காருமற்ற சித்தியாளனாக யோகீசுவரன், சூரியனார் எனப்படும் யக்ஞவல்லியின் குறிப்புக்களை மெய்யான இராமன் வரலாறு, யக்ஞ வல்லியின் இராமாயணம் [இராம கதை, இராம காதை, இராம கவிதை, இராம கீதை...... என்று பல பெயர்களால் ஏடுகளில் வேறுபட்டுக்குறிக்கப்படுகிறது அதாவது யக்ஞவல்லியின் இராமன் கதை, இராமன் கெடுவு, இராவணப்போர், இலவகுசப் போர், வண்டமர்குழலியின் சாபம், சீதையின் வாகை, சீதையின் வெற்றி, சீதையின் வாக்கு, இராவண பாசம், விசுவாமித்திரர் சபதம், வசிட்டர் தோல்வி, இராச்சத மானுடப்போர்...... என்று பல பெயர்களும் இராமாயணத்[illegible]க்ஞவல்லியால் தரப்பட்டுள்ளன. குறிப்பாக இராவணன் நீதி, வண்டமர் குழலி புலம்பல், சீதையின் ஆற்றல், இராமனின் கீதை...... என்பவை எழுத்தறிவில்லாத பாமரர்களிலும் யுகங் கடந்து செவிவழிச் செய்தியாக, பழமொழியாக, முதுரையாக, தாலாட்டாக, ஒப்பாரி யாக, காவடிச் சிந்தாக, தொழிலாளர் பாடலாக, கும்மிப்பாட்டாக...... பாடப்பட்டு வாழ்ந்து வருகின்றன] ‘சித்தர் இராமாயணம்’ என்று பெயரிடப்பட்டு போற்றிப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம்

மீனாட்சியம்மனைப் பற்றிக் குறிக்கும் சொற்கள் இன்றுள்ள மீனாட்சியம்மன் ஆலயத்துள் எத்தனையெத்தனை மீனாட்சிகள், சொக்கிகள், சொக்கேசுவரிகள், அங்கயற்கண்ணிகள், அங்கயற்கண்ணேசுவரிகள், அங்கயற்கன்னிகள், அங்கயற் *கன்னிசுவரிகள் [*கன்னேசுவரிகள் என்ற பாட வேறுபாடுண்டு] ஆலவாய் அழகிகள், மீனாட்சி அந்தரேசுவரர்கள், அங்கயற்கண்ணிகள், அங்கயற் கண்ணன்கள், அங்கயற் கண்ணேசுவரிகள் அங்கயற் கண்ணீசுவரர்கள், அங்கயற் கன்னிகள், கன்னன்கள், அங்கயற் கன்னிசுவரிகள் கன்னீசுவரர்கள்; ஆலவாய் அழகிகள் அழகன்கள்; இவர்களல்லாமல் பழைய சொக்கிகள் சொக்கன்கள்... ...எனப்படும் வழிபடு நிலையினர் இருக்கிறார்கள் என்பதனைப் பட்டியலிடப் புகுந்தாலே போதும், நான்கு யுகத்தின் சமய சமுதாய கலை இலக்கிய அரசியல் வரலாறுகள்; பண்பாட்டு வளவளர்ச்சி வரலாறுகள்; புற நாகரீக அறிவியல் வளர்ச்சி வரலாறுகள் மிகமிகத் தெளிவாக விளக்கப்பட்டுவிடும், இன்னும் சொல்லப்போனால் பதினெண் சித்தர்கள் குறிக்கின்ற மீதிக்காலம், பாதிக்காலம், ஆதிக்காலம், அனாதிக்காலம், என்கின்ற நான்கு காலங்களிலுமே இன்றுள்ள மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் இருந்திருக்கிறது. அதாவது, நான்கு யுகங்களாகவும் இந்த ஆலயம் இருந்து வந்திருக்கிறது இது விந்திய மலைக்கு வடக்கேயுள்ள மண்ணுலக மலைகளின் அரசாக விளங்குகின்ற இமயமலை தோன்றுவதற்கு முன்பிருந்தே; மெய்யான இந்து மதத்தின் அருளாச்சிக்கு தலைமைப்பீட ஆலயமாக இருந்து வருகின்றது' விரிவஞ்சி இது பற்றி இத்துடன் நிறுத்துகிறோம்

இன்றுள்ள உயரிய கோபுரங்களும், சுற்றமதில்களும், பெரிய பெரிய மண்டபங்களும் பிற்காலச் சோழப் பேரரசின் காலத்திலிருந்து [கி. பி. 785-1279] படிப்படியாக வளர்ச்சி பெற்ற ஒன்றே ஆகும். அதாவது தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் மெய்யான இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்காகவும், வள வளர்ச்சிக்காகவும், கருவறை மேல் நெடுங்கோபுரம் அமைத்து முதன் முதல் தஞ்சைப் பெரிய கோயிலைக்கட்டி முடித்ததுமே எதிர்பார்த்த வெற்றிகள் உருவாகாமல் போனதினால்; நுழைவாயில்களின் மேல் நெடுங்கோபுரம் அமைத்திட ஆணையொட்டிச் சென்றதையொட்டித்தான் தென்னாட்டிலுள்ள அனைத்து வழிபாட்டு நிலையங்களிலும [இந்த வழிபாட்டு நிலையங்கள் ஆலயம், கோயில், பீடம், திருப்பதி ......என்று நாற்பத்தெட்டு வகைப்படும் இவையல்லாமல் கருவறை என்ற பெயரில் உள்ள வழிபாட்டு நிலையங்கள் 48 வகைப்படும், இவைகள் அல்லாமல் வெட்ட வெளிர் கருவறைகள் எனப்படும் வழிபாட்டு நிலையங்கள் 48 வகைப்படும்] சுற்று மதில் நுழைவாயில்களின் மேலும் மண்டபங்களின் மேலும் நெடிய கோபுரங்கள் கட்டப்படும் மரபு தோன்றியது' எனவே, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருட்பணி விரிவாக்கத் திட்ட அமைப்புப் பணிகள்........இந்த மீனாட்சியம்மன் ஆலயத்திலும் நிலையாக இருக்கின்றன.

மெய்யான இந்து மதம் தோற்றுவிக்கப்படுவதற்கு எடுத்துக் கொண்ட காலம் வரையறைக்கு அப்பாற்பட்டு விரிந்து கிடக்கின்றது. அதாவது, இலெமூறியாக் கண்டம் முழுவதும் சுற்றிப்பார்த்து எங்கெங்கு அருள் ஊற்றுக்கள் தென்பட்டனவோ அந்த அருள் ஊற்றுக்களையெல்லாம் முறையாக ஆராய்ந்து அவற்றின் தன்மைகளுக்கேற்ப நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களுள் ஏதாவதொரு வழிபாட்டு நிலையத்தை குறிப்பிட்ட அருளூற்றின் மீது உருவாக்கினார்கள்

இதே போலவே, எல்லாவிதமான பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் நன்மை பயக்கும் வண்ணம் நாற்பத்தெட்டு வகையான வெட்ட வெளிச் கருவறைகளையும் உருவாக்கினார்கள். இவற்றால்தான் விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் மிகமிக நெருக்கமான தொடர்புகளும் உறவுகளும், உரிமைகளும் நிலைபெறு பெற்றன விண்ணுலகிலிருந்து அனைத்து வகையான தாத்தாக்களும், ஆத்தாக்களும், அப்பமையப்பன்களும், மற்றவர்களும் தங்களுடைய அண்ட பேரண்டமாகறும் மெய்ஞ்ஞான அறிவாலும் விஞ்ஞான அறிவாலும், அருளாற்றலாலும் அருளுலகக் கலைகளாலும், பொருளுலகக் கலைகளாலும் இம் மண்ணுலகில் தோன்றிய அனைத்து வகையான பயிரினங்களையும், 'உயிரினங்களை வரிசைப்படுத்தி, மானுட வாழ்க்கையை வளப்படுத்தினார்கள் அதாவது பதினெண் சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்பர்களும் நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும் நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்களும் நாற்பத்தெட்டு வகை உருவ அருவ அருவுருவங்களும், மனித வாழ்வோடு இரண்டறக்கலந்து மெய்யான இந்து மத வாழ்வை உருவாக்கினார்கள் இப்படி, விண்வெளியிலிருந்து வந்தவர்கள் இந்த மண்ணுலகில் கல்மட்டும் தோன்றி, மண் தோன்றுமலிருந்த ஆரம்பகாலத்திலிருந்தே தொடர் முயற்சியாகப் பல நூறாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செயல்பட்டுத்தான் மெய்ஞ்ஞான இந்து மதத்தை இம்மண்ணுலகில் நிலைநாட்டினார்கள்.

இந்த மெய்யான இந்து மதம் என்பதுதான் நாம் காணுகின்ற பரந்த வான வெளியில் கணக்கற்று மின்னுகின்ற விண்மீன்கள் நிறைந்த பரந்து விரிந்த விண் வெளியிலுள்ள நூற்றியெட்டு திருப்பதி அண்டங்களையும், இருநூற்று நாற்பத்திமூன்று சத்தி அண்டங்களையும், ஆயிரத்தெட்டு சிவாலாய அண்டங்களையும், இணைத்து அருளாட்சி நடத்தும் சமய, சமுதாய அரசியல் தத்துவமும் சித்தாந்தமுமாகும்.

இந்த மெய்யான இந்து மதத்தின் மூலவர்களாகவும் காவலர்களாகவும் இயக்குநர்களாகவும் இருப்பவர்களே காலங்கள் தோறும் அனைத்து உலகங்களிலும் தோன்றித் தோன்றிச் செயல்படுகின்ற I. பதினெண் சித்தர்கள், II. பதினெட்டாம்படிக் கருப்பர்கள், III. நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்கள், IV நாற்பத்தெட்டு வகைக் கருவறை மூலவர்கள், V நாற்பத்தெட்டு வகை வெட்ட வெளிக் கருவறை மூலவர்கள், VI நாற்பத்தெட்டுவகைச் சித்தர்கள், VII நாற்பத்தெட்டு வகை அருளாளர்கள், VIII நாற்பத்தெட்டு வகை அருளாளிகள், IX நாற்பத்தெட்டுவகை அருளாடு நாயகங்கள், X நாற்பத்தெட்டு வகை அருட்பட்டத்தவர்கள், XI பதின் மூன்று வகைக் குருவழி ஆச்சாரியார்கள், XII பதின் மூன்று வகை கருவழி ஆச்சாரியார்கள், XIII நாற்பத்தெட்டு வகை பதினெண் சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள் XIV நாற்பத்தெட்டு பதினெண் சித்தர் பீடாதிபதிகள் எனப்படும் பதினான்கு. இதேபோல் இந்த மெய்யான இந்து மதத்துக்கு ஆட்சி மொழியாகவும், பரந்து விரிந்துபட்டுள்ள அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் இணைக்கின்ற அருளுலக ஆட்சி மொழியாகவும் இருப்பதே அமுதத் தமிழ் இது செந்தமிழ், தீந்தமிழ் தெய்வத்தமிழ், கட்டமிழ், பைந்தமிழ், ஒண்தீந்தமிழ், வண்டமிழ், இன்றமிழ், மென்றமிழ் என்று நாற்பத்தெட்டு வகையான சிறப்புச் சொற்களால் சிறப்பிக்கப்படுகின்றன. இதனுடைய ஒவ்வொரு எழுத்தும் அருளாற்றலை உருவாக்கித்தரும் மந்திர, எந்திர, தந்திரச் சக்கரங்களாகவே இருக்கின்றன இதனுடைய ஒவ்வொரு சொல்லும் உயிர்ப்புத்தன்மையும், புத்துயிர்ப்பு ஆற்றலும் உடையதாக இருக்கின்றது. இதுவே, அண்டபேரண்டங்களிலுள்ள உலகங்களில் தோன்றுகின்ற அனைத்து மொழிகளுக்கும் தாயாக, மூலமாக, ஆரம்பமாக, கருவாக, உள்ளீடாக, உயிராக ... இருக்கின்றது எனவேதான 'தமிழ் மொழியை பிழையற எழுதுவதே பெரிய யாகம், யக்ஞம், வேள்வி ஓமம் ஒகர, தவம்...... முதலியன செய்வதற்குச் சமமாகும்' என்று சிறப்பிக்கப்படுகிறது. இதைப் போலவே தமிழை மிக அழகாகவும், இனிமையாகவும் உரிய இசையோடு பேசுவதே சிறந்த பூசை என்றும் சிறப்பிக்கப் படுகிறது......குருபாரம்பரியத்தில்

இந்த மெய்யான இந்துமதத்துக்கிற்கென்று ஒவ்வொரு உலகிலும் நூற்றெட்டுத் திருப்பதிகள் 243 சத்திபீடங்கள், 1008 சிவாலயங்கள், கணக்கற்ற நாற்பத்தெட்டு வகையான கருவறைகள், நாற்பத்தெட்டு வகையான வெட்டவெளிக் கருவறைகள், செயலகங்களாக அமைக்கப்பட்டே அருளாட்சி நிறுவப்படுகின்றது. இப்படி அருளாட்சி நிறுவப்பட்ட பிறகுதான் அந்த உலகம் எவ்வளவு காலம் நிலைத்திருக்குமென்பதைக் கணக்கிட்டு அதனை உகங்களாக (யுகங்களாக) வகுப்பார்கள். பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், அதன்பிறகே பதினெண் சித்தர் பீடாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டு அருளாட்சி அமையும். அருளாட்சியின் அருட்பேரரசாக குறிப்பிட்ட நான்கு யுகங்களுக்குள் நாற்பத்தெட்டுவகைப் பீடாதிபதிகள் தோன்றுவார்கள் (தொடரும்)

சித்தர் இராமாயணப்படி விசுவாமித்திரரின் சூழ்ச்சியால் தான் மானுட இனத்தைச் சார்ந்த பதினாறு வயது நிறைந்த சூரியகுல இளவரசனான ராமனுக்கும் (32) முப்பத்திரண்டு வயது நிரம்பிய சனகரின் ''வளர்ப்பு மகளான'' அரக்கர் குல மகளான சீதைக்கும் திருமணம் நடந்தது.

அரக்கர்குலத் தலைவனான இலங்கையர் கோனன் இராவணனின் மகளான சீதையும் மானுடகுலச் இராமனும் இருபது வருடங்கள் இல்லறம் நடத்தியும் குழந்தை பிறக்கவில்லை அந்த நிலையில் இராமனுக்கு முடிசூட்ட தசரதன் நினைத்தார். வசிட்ட முனிவர் உட்பட தசரதன் அரண்மனையிலிருந்த அனைவரும் அரக்கர் குலத்தைச் சேர்ந்த சீதைப் பட்டத்து அரசியாக வருவதை விரும்பவில்லை. மேலும் சீதைக்குப் பிறக்கக் கூடிய குழந்தை அரசாளக் கூடாது என்று அஞ்சினார்கள். எனவேதான், இராமனையும்; சீதையையும் மரவுரி உடுத்து தவக்கோலத்தில் துறவிகளாகப் பதினான்கு ஆண்டுகள் தீர்த்தங்கள் ஆடி வனவாசம் வாழ்ந்துவரச் செய்தார்கள் இந்தச் சதியில் பரதனும் தசரதனும் தவிர அனைவரும் பங்குபெற்றார்கள். வசிட்டர் இந்தசதிக்கு தலைமை தாங்கியதின் மூலம் தனது பகைவரான விசுவாமித்திரரின் செயல் திட்டத்தை முறியடித்தார். (சூரிய குலம் தொடர்ந்து அரசாளாமல் இனக் கலப்புற்ற புதிய அரசகுலத்தைத் தோற்றுவித்தல் எனும் செயல் திட்டம்)

சீதையும் இராமனும் தங்களை மறந்த நிலையில் கூட வாழ்ந்துவிடக் கூடாது என்பதைக் கண்காணிக்கத் தான் இலக்குவனை இராமனோடு அனுப்பிவைத்தார்கள் அரண்மனைவாசிகள் இந்த இலக்குவனுக்குச் சீதை அரக்க இனத்தைச் சேர்ந்தவள் என்று தான் தெரியுமே தவிர அவள் இராவணன் மகள் என்று முழுமையாகத் தெரியாது. ஆனால் இராவணன் கொலையுண்டு வீழ்ந்த உடனேயே சீதை இராவணன் மகள்தான் என்பதைப் புரிந்து கொண்டான். அடிப்பட்டுக் கீழே விழுந்த இராவணனை இராமன் அளவுக்கு மேல் மதித்தது கண்டு இராமனையும் அரக்க இனத்தைச் சார்ந்தவனாகவே நினைத்தான் அதனால் தான் இராமன் மூன்றுமாதக் கருவைச் சுமந்திருந்த சீதையைக் கொலை செய்யுமாறு ஆணையிட்டபோது அவனை அரக்க இனத்துக்குரிய பண்பைப் பெற்று விட்டான் என்று இலக்குவன் சீற்றத்தோடு குறை கூறுகிறான். சீதையைக் கொலை செய்யக் கூடபயப்படுகிறான். மேலும் இலங்கையிலிருந்த திரிசடையும் சூர்ப்பனகையும் சீதையைக் கொன்றால் தன்னைச் சும்மாவிடமாட்டார்கள். என்று பயந்தான். இலக்குவனே கூறுகிறான் இராவணன் மாண்டதும் வீடணன் மிகம் பெரிய அதிர்ச்சிக்குள்ளானான் என்றும்; சீதை இராவணேசுவரன் மகள் என்று தெரிந்ததும் ஆளே முற்றிலும் மாறிவிட்டான் என்றும் குறிக்கிறான். மேலும் சீதைக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டால் வீடணன் சீதைக்காக பரிந்து கொண்டு எதையும் செய்ய முன்வருவான் என்று குறிக்கின்றான்.

சீதை கம்பனின் இராமயணத்திலும் மற்ற இராமாயணங்களிலும குறிப்பது போல் விருப்ப -மில்லாமல் இராவணனால் கட்டாயப்படுத்தி இலங்கைக்குக் கொணடு செலலப்படவில்லை. சித்தர் இராமாயணத்தல் சீதை இராவணனைக் கண்டவுடன் கன்று தாய்ப்பசுவைக் கண்டதும் ஓடிச்செல்வது போல், ஓடிச்சென்று தன்னையறியாமல் பாசத்தால் கட்டுண்டு நின்றாள். அப்பொழுதே இராவணன அவளிடம் அவள்தான் தன்னுடைய மகள் என்பதைக் கூறிவிடுகிறான். அவளும அதையுணர்ந்து பிறந்தது முதல் காணாத தன தந்தையின் காலில் விழுந்து வணங்கி இறுகக் கட்டித் தழுவி அழுது புலம்புகிறாள். அவளிடம் இராவணன் குறிப்பிட்ட காலம் வரை அவள் தன்னுடைய மகள் என்பது வேறுயாருக்கும தெரிய வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறான். ஏனென்றால் எதிர்பாராது நிகழ்ந்து விட்ட சூர்ப்பனகையின் மானபங்க நிகழ்ச்சியால் சூர்ப்பனகையும் அவளைச்சார்ந்தவர்களும இராம லக்குமணர்களைத் தண்டிக்க விரும்புகிறார்கள் என்றும்; அதனால் இராமன் தனது மருமகன என்பது தெரிந்தால் சூர்ப்பனகையும் அவளைச் சேர்ந்தவர்களும வீணான குழப்பங்களையும் நேரடி -யாகவே இராமனுக்கும சீதைக்கும் ஆபத்தையும் விளைவிக்க முற்படுவார்கள் அதே நேரத்தில் தன் மனைவி வண்டமர் குழலிக்கு சீதை தனது மகள் என்பது தெரிந்துவிட்டால் உடனே அவள் தன்மகளைக் காட்டுக்கு அனுப்பிய அயோத்தி அரச குடும்பத்தைப் பூண்டோடு அழிக்கப் படை -யெடுக்கச் செய்வாள். தான் எவ்வளவு தடுக்க முயன்றாலும் தன தம்பிகளும் மகன்களும், அரக்கர் குலத்தவர்களும் சீதைக்காக சூரிய அரசகுலத்தையே அழித்தொழிக்க முற்பட்டிடுவார்கள். அப்பொழுது இராமன நிலை மிகவும் சிரமமாகி விடும அரக்க குலத்துக்கும் அரசகுலத்துக்கும் (மானுட அரச குலத்துக்கும்) ஏற்பட்டுருக்கும் நல்ல உறவு விரைவில் தீமை பயப்பதாகி விடக் கூடாது என்றும் தான் பயப்படுவதாகக் கூறுகிறான். அதற்குச் சீதையும் ஒப்புக் கொள்ளுகிறாள்

குறிப்பு:- இப்படி இராவணன் சீதையிடம் கூறியவைகளை சீதை இராமனிடம் கூறிய பொழுது இராமன் உணர்வு வயப்பட்டு வாய்திறந்து; ''இராவணேசுவரா! நீ நீதிமான்; பேருளாளன்; அறமகன்; சிவாநுபூதிச் செல்வன்; மகாவீரன்; காமனை யொத்தவன்; ஆயிரமாயிரம இராமர்கள் சேர்ந்தாலும் உனக்கு ஈடாக மாட்டார்கள். மகள் மீது கொண்ட பாசத்தால்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

# உடற் பயிற்சியே ஆவி, ஆன்மா ஆருயிர் வளர்ச்சி

உலகில் தோன்றிய அனைத்து மகான்களும், ஞானிகளும், தேவகுமாரர்களும் தேவதூதர்களும் புத்தர்களும், தீர்த்தங்கரர்களும், ஆச்சாரியார்களும், திருத்தோன்றல்களும் உடற்பயிற்சிக்கு முதன்மை கொடுத்திருக்கிறார்கள் உடல் நலல கட்டுக்கோப்பும்; நளின மெலினப் பண்பும்; எளிதில் சோர்வுறாச் சுறுசுறுப்பும்; பசி, தாகம், உறக்கம் தங்கும் பேராண்மையும்........ பெற்றிட்டால் தான் தவம், வேள்வி, பூசை, மோனம், ஓகம், போகம், மோகம், யோகம்........ முதலிய அனைத்திலும் வலிமைமிகு வளவளர்ச்சி பெறலாம். இதற்காகத்தான் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் ஓகாசனம், யோகாசனம் சேவலோன் போர்க்கலைகள், கொம்பு, மடு கோல், தாந்தரீகப் பயிற்சிப்படிகள், மாந்தரீகப் பயிற்சிப்படிகள், ஏந்தரீகப் பயிற்சிப்படிகள்........... முதலியவற்றை அவரவர் அக்கறை, ஆர்வம், முயற்சி, பயிற்சித்தேர்ச்சி.......... முதலியவற்றிற் கேற்பவே கற்றுத்தரும் மரபு கையாளப்படுகிறது. அப்படியல்லாமல், அனைவருக்கும் அனைத்தையும் கற்றுக் கொடுப்பதால்; இந்த அரிய பெரிய சீரிய, நேரிய கலைகளுக்குரிய பெரிய பயன்களும் உரிய மரியாதைகளும் கிடைக்காமல் போய்விடும்.

இன்றைய நாட்டு நடப்பில் உடற்பயிற்சிக் கலைகளுக்கு ஊசி முனையளவு கூடச் செல்வாக்கில்லை எங்கோ, சிலர், பாரம்பரியமாகவும்; ஆசையாகவும் உடற்பயிற்சிக் கலைகளைக் கற்றுக் கொள்கிறார்கள். அதுவும், மேனாட்டு மோகத்தால் 'கராத்தே' 'குங்பூ' என்ற பெயரால் இன்றைய பள்ளி மாணவர்களில் சிலரும் வசதி வாய்ப்புள்ள இளைஞர்கள் சிலரும்.......... உடற்பயிற்சிக் கலையைப் பயிலுகிறார்கள். இவர்களால் இக்கலைகளோ; அல்லது, இக்கலைகளால் இவர்களோ ...வளர்ந்ததாகத் தெரியவில்லை இந்தநிலையில், எங்கோ சில கிராமப்புற இளைஞர்கள் சமுதாயப் போராட்டங்களுக்காக அடிதடி நிகழ்த்து மளவிற்கு மட்டுமே உடற்பயிற்சிகளை வளர்த்துக் கொண்டுள்ளார்கள் இவை பொதுவான பயன் நல்கவில்லை.

உலகியலை மறந்தும் துறந்தும் ஆன்மீகச்சிந்தனைகளிலும் தெய்வீக உணர்வுகளிலும் குருவழிப் பயிற்சிகளிலும் கருவழியுரைப் பெற்ற முயற்சிகளிலும்......வாழ்ந்திடும் அருளுலகத்தார்தான் இந்த உடற்பயிற்சிகளுக்கு எல்லையில்லாத முதன்மையும் சிறப்பும் நல்குகிறார்கள் — குருபாரம்பரியத்தில் (a) உடலுறுப்புக்களையே ஆயுதங்களாக்கிச் செய்யும் பயிற்சிகள் (b) ஆயுதங்களை உடலுறுப்புக்களோடு இணைந்து செயல் படப்பழக்கும் பயிற்சிகள் (c) சுடரொளிப் பயிற்சிகள் (d) இசையொலிப் பயிற்சிகள் (e) நீர் விளையாட்டுப் பயிற்சிகள் (f) ஓகாசனப் பயிற்சிகள் (g) யோகாசனப் பயிற்சிகள் (h) தோற்ற மாற்ற ஏற்றப் பயிற்சிகள் (i) கூடுவிட்டுக் கூடுபாயும் பயிற்சிகள் (j) அங்கங்களைக் கழட்டிப் பூட்டும் பயிற்சிகள் (k) ஏந்தரீக, தாந்தரீகப் பயிற்சிகள், (l) குதிரையேற்ற, யானையேற்றப் பயிற்சிகள்...........என்று பல வகையான உடற்பயிற்சிகள் குறிக்கப்படுகின்றன — இவை தொடர்பாகக் குருபாரம்பரியத்தில் உள்ள வாசகங்களில் சில இங்கு குறிக்கிறோம் ''பத்துக்களால் பறக்கலாம்'' ''பதினாறால் ஆவி பிரிக்கலாம் சேர்க்கலாம்'' ''ஆறுயரக் கோலால் ஆருயிர் பிரிக்கலாம் சேர்க்கலாம்'' ''ஈராறுயரக் கோலால் ஆன்மா பிரிக்கலாம் சேர்க்கலாம்'' ''வேலும் சூலமும் ஓச்சி வீசிப் பழகினால் ஆவி, ஆருயிர் ஆன்மா ஒன்று சேர்க்கலாம்'' சேவலோன் போர்க்கலைகளால் சாகக்கலையில் தேறலாம்'' ''சிவனின் ஓகாசனயோகாசனக் கலைகளால் போகப் புனலாகிடலாம்''; ''வேய்குழலாள் பயிற்சிதரு ஏந்தரீக மாந்தரீகப் பயிற்சிகளால் வேகாத் தலையாகலாம்'' ''கால்சாமப் பயிற்சியால் காலமெல்லாம் எலிச் சுறுசுறுப்பும், புலிப் பாய்ச்சலும், யானையின் வலிமையும் பெற்றிடலாம்''........ இப்படிப் பட்ட வாசகங்களை நினைவு கூறநேரிட்டதாலேயே எமக்கு அஞ்சல் வரையும் எண்ணம் பிறந்தது.

இன்றைய நாட்டு நடப்பில் நோயாளிகள், பேயாளிகள், சோம்பேறிகள், நலிவாளிகள், தளர்வாளிகள்........ மிகுதியாகி வருகிறார்கள் , இளைஞர்களுக்கிடையில் சுறுசுறுப்பு, உழைக்கும் ஆர்வம், தன்னம்பிக்கை மனவலிமை (தைரியம்), புதுமை நாட்டம் துய்ப்புத் தாகம், தோய்வு மோகம்; ஆய்வு வேகம், கடலலைபோன்ற தொடர் முயற்சி,.........முதலிய பண்புகள் தேங்கி, மங்கிக்குறைந்துள்ளன. இதனால், பொருளுலக வாழ்வும் இருளுலக வாழ்வும் இடர்ப்பட்டு இன்னல் மிகுந்துள்ளன இவற்றைச் சரி செய்யும் மாபெரும் பொறுப்பு நம்மால்தான் ஏற்றுச் செவ்வனே நிறைவேற்றப்பட முடியும்.

(10-ஆம் பக்கம் தொடரும்).

# மெய்யான இந்து மதமும் பொய்யான ஹிந்துமதமும் வரிசையில்.......!

சித்தர் மகள்கள் அனாதி பராசத்திகள் ஆதிபராசத்திகள், அனாதி மகாசத்திகள், ஆதிமகா சத்திகள், அனாதி சத்திகள், ஆதி சத்திகள் என்று ஆறு வகையினர் இம் மண்ணுலகில் அருளாறுகளாக ஓடி அருளுலகையும், பொருளுலகையும் வளப்படுத்துகிறார்கள். இவை உருவாக்கும் காடுகளும, கழனிகளும், கனி மலர்ச்சோலைகளும், தோட்டங்களும் தான் உலக அருளாளர்களாக விளங்குகிறார்கள். இத்தகைய அருளாளர்களில் ஒருவரே மேல் மருவத்தூர் ஆதிபராசத்தில் பங்காரு அடிகளாராவார்கள். இவர் ஆத்தாளின் அருளால் அண்மையில் சென்னை மாநகரில் பத்து இலட்சம் மக்களுக்கு மேல் ஒன்று திரளும்படி செய்து சென்னை மாநகர கடற்கரையில் மிகப் பெரிய ஞானவேள்வி செய்தார். இந்த அருட் பெரும் திருவிழாவிற்கு இந்தியத் துணைக்கண்டத்துக் குடியரசுத் தலைவரே நேரில் வந்திருந்தார். தமிழகத்து முதலமைச்சர் முதல் அனைத்து அமைச்சர் -களும், பல சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் துறைகளின் தலைவர்கள் பலரும் உரிமையோடு கலந்து பெருமை செய்தார்கள். ஆனால் தமிழகத்திலிருந்து வெளிவரும் ஆங்கில மொழி, தமிழ்மொழி நாளேடுகளோ, வார இதழ்களோ, மாத மலர்களோ இன்று வரை தவத்திரு மேல் மருவத்தூர் ஆதிபராசத்தி பங்காரு அடிகளாரின் 'புகைப்படத்தை முழுமையாக வெளியிட்டு மேற்படி திருவிழாவைப் பற்றிய விளக்கங்களையும், பயன்களையும விளக்கி எழுதிட முன் வரவில்லை! முன் வரவில்லை! முன் வரவில்லை! முன் வரவேயில்லை! இதுதான் மெய்யான இந்து மதத்திற்கும், பொய்யான ஹிந்து மதத்திற்கும் இடையே உள்ள போராட்ட நிலைகளையும், வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும் உயர்ச்சி, தாழ்ச்சிகளையும் விளக்கிக் கொள்ளுவதற்குக் கிடைத்துள்ள சான்று. புரிந்தால் புரிந்து விழிச்சியுறு! எழிச்சி பெறு! புரட்சி செய்! மறுமலர்ச்சி அடைந்திடு! என்று குவலய குரு பீடம், இந்து மதத்தந்தை, அருளாட்சி நாயகம் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார்.

---

# அன்புள்ள சேவகனுக்கு........!

அன்புச் சேவக!

பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகின்ற பொழுது மட்டுமே; அவர்களால், கல்லும், புல்லும்; அதாவது, அனைத்துவகையான உயிரற்ற பொருள்களும், பயிரினங்களும் உயிரினங்களும் கடவுளாக்கப்படும் அருட்பணி நிகழுகின்றது. எனவே தான், அனைத்தையும், அனைவரையும் அருளூற்றுக்களாக மாற்றும் அமாவாசை வேள்வி [கந்தழி நிலை = சூரிய வழிபாடு]; மூன்றும் பிறைத் தொழுகை [கொடி நிலை = விண்மீன், கோள் வழிபாடு]; பருவபூசை [வள்ளி நிலை = திங்கள் (நிலவு, சந்திரன்) வழிபாடு] என்ற மூன்றும் அருட்பணி விரிவாக்கத் திட்டங்களாகின்றன.

ஆண்டுக்கொரு முறை கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் ஆகிய நான்கிலும் அந்தந்த யுகத்துக்குரிய மாதங்களில்; 'ஞானம் வழங்கு பால்குடப் பருவபூசைத் திருவிழா' கொண்டாடும் திட்டம் செயலாக்கப்படுகிறது; இதன் மூலம் அனைத்து வகையான தர, திர தீர, வீர, உர........ மக்களும் ஒரு முறையாவது அருளை அநுபவப் பொருளாகப் பெற்றுத் தெய்வீக இன்பம் துய்க்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதனால், அக இருளும, புற இருளும், அகன்று; சாதாரணப் பொது மக்களும அருளாளர்களாக மாறும் முயற்சியில் ஆர்வம் கொள்ளும் நிலைகள் உருவாக்கப்படுகின்றன.

மனித வாழ்வு ஏக்கத்திலும் துக்கத்திலும், தூக்கத்திலும், வெறியிலும், அற்பப் பொருளுலக ஆசைகளிலும் வீணாவதைத் தடுக்கும் முயற்சியே ஞானம் வழங்கு பால்குடப் பருவ பூசைத் திருவிழா.

இந்த அமுத ஆண்டு வைகாசித் திங்கள் 9-ஆம் நாள் [23—5—86 வெள்ளிக்கிழமை] நிகழ்ந்த ஞானம் வழங்கு பால்குடப் பருவபூசைத் திருவிழாவில் நூற்றுக்கணக்கில் திருக்குடங்களுடன் உலா வந்தவர்களில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் அருளூற்றுக்களாகவே மாறினார்கள். இவர்கள் மெய் மறந்து அருளுலக இன்ப வெள்ளத்தில் சிறு துரும்பு போல் அலைமோதி துள்ளி ஆடினார்கள். இவர்கள், தங்கள் தலையிலிருந்த திருக்குடத்தை இறக்கிப் பொருளுலகுக்குத் திரும்ப மறுத்துக் குதித்து ஆடியும் அழுது புலம்பி ஆனந்தக் கண்ணீர் வடித்தும் ஆடினார்கள். ஒவ்வொருவரையும் நாலைந்து பேர் பிடித்தும் கூட நிறுத்த முடியவில்லை. இறுதியில் பத்துப் பதினைந்து பேர்கள் சேர்ந்து முயன்றுதான் அருள் வெள்ளத்தில் ஆடிச் சென்றவர்களின் தலையிலிருந்து திருக்குடத்தை இறக்க முடிந்தது திருக்குடம் இறக்கப் பெற்றும் சிலர் சுயநினைவு பெறப் பல மணிநேரம் ஆயிற்று —இதே நிலைதான் கங்கைக்கரையில் இராம கிருட்டிணப்பரம அப்சரால் அவரது அடியார் விவேகாநந்தருக்குக் கடவுளை உணரும் பொருட்டு ''அருட்பெருஞ் சுடர்'' [The Divine Light அருட்பெருஞ்சோதி) மயக்க நிலையில் வழங்கப்பட்டு; மீண்டும் அவரை அந்த அருளுலகப் பேரின்ப நிலையிலிருந்து விடுவித்துப் பொருளுலக நிலைக்குக் கொணர்ந்தபோது ஏற்பட்டது அதாவது, அருளுலக அநுபவம் எவரையும் பொருளுலக உணர்வுகளனைத்தையும் மறந்து பேரின்ப ஆட்டத்தில் ஈடுபடுத்திடும். இப்பேருண்மையை, இனியாவது அனைவரும் அறிந்தும், பிறர்க்கு அறிவித்தும் நமது அருட்பணி விரிவாக்கத்திட்டம் வெற்றி பெறப் பாடுபடுங்கள்.

அன்பு

ஞாலகுரு சித்தர் கருவூரார்



# இந்தியாவில் மார்க்சீயம் - 11

—சித்தர்

அதில்......''அனைத்து நாடுகளிலுள்ள பாட்டாளிகள் ஒன்றிணைந்து, ஒற்றுமைப் பட்டுச் செயல்பட்டால் அதிகார வர்க்க, ஆதிக்க வர்க்கமாக இருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தாரால் உருவாகும் போர்களே இல்லாமல் செய்து விடலாம்''........ என்ற பேருண்மையினையும் - உலகில் தோற்றுவிக்கப்படும் போர்களின் உண்மைத்தன்மை -களையும் விளக்கினார்.

பிரஞ்சுப்படை செடானுக்கருகில் தோல்வியடைந்து பிரான்சில் குடியரசு ஏற்பட்டதால் அதையொட்டிக் கார்ல் மார்க்சு அமெரிக்க நாடுகளில் உள்ள 'இண்டர் நேசனல் அங்கத்தினர்களுக்கு நடைபெற்று முடிந்த போர் பற்றிய 'இரண்டாவது வேண்டுகோளை எழுதினார் இதில் இராணுவ வெறியும் நாடுபிடிப்பதற்கான போர் -களும் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு ஒவ்வாதவை.........என்னும்; கடந்த காலத்தின் வரலாற்றில் ஈடு இணையற்ற இந்த மகத்தான நிகழ்ச்சி ஒரு கூடுதல் ஒளி வீசும் எதிர் காலத்திற்கான வாய்ப்பைத் திறந்து வைக்கின்றது- பொருளாதாரத் துன்பத் துயரங்களையும் அரசியல் வெறிப் பிதற்றலையும் கொண்ட பழைய சமுதாயத்திற்கு நேர்மாறாக, ஒரு புதிய சமுதாயம் எழுச்சியுற்று வருகிறது என்பதை அது நிருபணம் செய்கிறது. சமாதானம்தான் அந்தச் சமுதாயத்தினுடைய சர்வ தேச விதியாக இருக்கும் ஏனெனில் அதனுடைய தேசிய ஆட்சியாளர் எல்லா இடங்களிலும் ஒன்றே அதாவது தொழிலாளர்கள்!......என்றே கூறி முடிக்கின்றார்.

1871 மார்ச்சு 18 முதல் 'மே' மாதம் முடிய கார்ல் மார்க்சும் ஏங்கல்சும் ''பாரிசில் புரட்சி வெற்றியடைந்ததைத் தொடர்ந்து இதற்கு ஆதரவாகப் பல்வேறு நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர் பாரீசுப் புரட்சியால் கம்யூன்' ஒன்று அமைக்கப்பெற்றது உலக வரலாற்றில் புரட்சிச் சாதனையாக விளம்பரப்படுத்திய பெருமை இவர்களையேச் சாரும்-பாரிசுக் கம்யூன் புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு இவர்களுக்கு அறிவுறைக் கூறி வழி காட்டி உதவிய பெருமை இவ்விரு தோழர்களையுமேச்சாரும் இவர்கள் செர்மானுய மருத்துவரும் 1848-49 ஆம் ஆண்டுப் புரட்சியின் நாயகர்களில் ஒருவருமான 'கேல் பண் லுத்விக்கு புரட்சி -யைப் பற்றிப் பலபடியாகத் தெரிவித்தும் புரட்சித் தவறுகளையும் இடித்துக் கூறினார். மே 30 இல் காரல் மார்க்சு 'பிரான்சில் உள்நாட்டுப் போர்' என்ற அறிக்கையை எழுதி 'செனரல் கவுன்சிலில்' .........'பாட்டாளி வர்க்க அரசை அமைக்கும் முதல் முயற்சியே 'பாரிசுக் கப்யூன்' என்பது இதில் விளக்கப்பட்டது........ ஆனாலும் இதன் செயல்பாடுகள் பற்றி அல்லது தவறானப் பாதையை நாடுவது பற்றி தனது ஐயக் கருத்தை வெளியிடாமலும் இருக்கவில்லை..... ...

இதே ஆண்டில் (1871) செப்டம்பர் 17-23 வரை நடைபெற்ற இலண்டன் 'முதலாவது இண்டர் நேசனல்' மாநாடு மார்க்சாலும் நடத்தப்பட்டது தொழிலாளி வர்க்கம் ஒரு மாபெரும் அரசியல் போராட்டத்தின் மூலம் தான் 'பக்கூனிசுடு' களை ஒழிக்க முடியும் என்று வாதிட்டார்.

(தொடரும்)

இதனை எண்ணியே நமது நிறுவன நிர்வாகக்குழு நேரடியாக இ.ம.இ. பயிற்சி வகுப்புகளை நாடெங்கும் நிகழ்த்திடச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அவர்களால் இ.ம.இ. அமைப்பாளர்களும், அ.வி.தி. செயல் வீரர்களும் உரிய உடற்பயிற்சிகளையும், வரலாற்றறிவினையும், தத்தவ அறிவினையும் பெற்றிடுவார்கள். அப்படித் தயாரிக்கப்படுபவர்கள் ஆங்காங்கே உடற்பயிற்சிப் பள்ளிகள் நிறுவி இளைஞர்களைத் தயாரிக்க வேண்டும்.

''சமய உணர்ச்சியும் முயற்சியும் தரும் பயிற்சிகள் குறுகிய வெறியுணர்வுக்குரியவையாகும்; சமுதாய உணர்ச்சியும் முயற்சியும் தரும் பயிற்சிகளே பரந்த நெறியுணர்வைத்தரும்—'' என்று சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவுவாதிகள், நாத்திகவாதிகள், அரசியல் வாதிகள்........பேசித்திரிகிறார்கள் இது, ஓவியனை அழைத்து அறுவை மருத்துவம் செய்ய ஆணையிடுவதைப் போன்றதாகும், சமயஅறிவோ, அநுபவமோ இல்லாத மேற்புல்மேயும் நிலையினர் சமயத்தைப் பழிப்பது வேடிக்கையே இவற்றையெல்லாம் முறியடித்தேயாக வேண்டுமென்றால்; சித்தர் நெறி உடற்பயிற்சி மன்றங்கள் நாடெங்கும் துவக்கப்பட்டாக வேண்டும். தமிழர்களால் தமிழ் மொழியில் உடற்பயிற்சிக்கலைகள் கற்பிக்கப்படும் நிலை வளர்க்கப்பட்டேயாக வேண்டும். அந்த நிலைதான், தமிழ் மொழி தமிழினம், தமிழ் நாடு. தமிழ்ப்பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழர் சமுதாயம்.........என்ற உணர்வுகளைப் பசுமையோடு செழித்து வளரச் செய்து கொழுத்த பயன்களை அறுவடை செய்து தரும்.

நாட்டு நடப்பில் பல மொழியினரின் கலப்பும் ஆதிக்கமும் அதிகமாகி விட்டதால்; தமிழாசிரியர்களுக்கு என்ன தெரியும்? தமிழ் படித்தால் என்ன பயன்? தமிழ் மொழியில் என்ன இருக்கிறது? தமிழ் மட்டும் தெரிந்தவர் அறிவாளிகளாக இருக்க முடியாது! அன்னிய மொழிவழிக் கற்பவை தான் அறிவுடையவை! பயனுடையவை!.........என்ற கருத்துக்கள் மேலோங்கி வருகின்றன இந்தக் கேவல மிகு அவல நிலைகளை அரசியல்வாதிகளோ! சமுதாயச் சீர்திருத்த வாதிகளோ! நாத்திக மொழி வெறியர்களோ! தடுத்த நிறுத்த முடியாது, மாற்றுப் பரிகாரம் செய்ய முடியாது அதாவது முழுக்க முழுக்க மதவாதிகளான சிந்தனையாளர்களாலும், செயல் வீரர்களாலும் தான் மேற்படி கேவலமிகு அவலநிலைகளைத் தடுத்து நிறுத்தி அகற்றி மாற்றிட முடியும், மத உணர்வுவேறு! சமுதாய உணர்வுவேறு! அரசியல் உணர்வுவேறு! என்று பிதற்றும் பகுத்தறிவுவாதிகளையும் நாத்திக வாதிகளையும் திருத்துவது அரிது எனவே, அந்த வீணை முயற்சியில் ஈடுபட்டு நமது கருத்தையும், காலத்தையும், முயற்சியையும் வீணக்க வேண்டாம் நாம் வளர்க்கப் போகும் உடற்பயிற்சிக்கலைகளால் ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் இணைவது போல் நம்நாட்டின் அரசியல் உணர்வும், சமுதாய உணர்வும், சமய உணர்வும் இணைக்கப் பட்டும்! இணைக்கப்படட்டும்! இணைக்கப்படட்டும்! அப்பொழுது தான் ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற கருத்து முழக்கம் செயல் வடிவில் வெற்றி பெறும்! வெற்றி பெறும்! வெற்றி பெறும்! எனவே நோயுற்றவர்கள் நோயற்ற நிலை பெறவும், நோயற்றவர்கள் மிகச் சிறந்த ஆன்மீக வலிமையும் அருள் வளமும் பெற்றிடவும் நமது உடற்பயிற்சிக் கலைகள் உதவட்டும்! உதவட்டும்! உதவட்டும்! தமிழ் வழியாகவே அனைத்துக் கலைகளையும் கற்கலாம் என்ற நம்பிக்கை தன்னம்பிக்கையாக நம்மவர்களிடம் மலரட்டும்! மலரட்டும்! மலரட்டும்!

இனிமேலாவது தமிழுணர்வும் தமிழறிவுமுடையவர்கள்தான் ஆசிரியர்களாக முடியுமென்ற நிலையும்; ஆசிரியர்களெல்லாம் நல்ல தமிழுணர்வும் தமிழறிவுமுடையர்களாகின்ற நிலையும் வளரட்டும்! வளரட்டும்! வளரட்டும்! அந்நிலையால் உருவாகும் இனப்பற்றும், இன ஒற்றுமையும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும்தான் தமிழினத்துக்கு ஆட்சி மீட்சி தேடித்தரும். எனவே, இனத்தையும் நாட்டையும் காப்பாற்ற முடியும்! காப்பாற்றமுடியும்! காப்பாற்றமுடியும்!......... என்ற பேருண்மை அனைவருக்கும புரியும் வண்ணம் நமது உடற்பயிற்சி நிலையங்கள் வளரட்டும்.

—குவலய குருபீடம்

---

# அமாவாசை விரதமும் சுடுகாட்டுப் பூசையும் - 3

இந்தப் பதினெண் காட்டுப் பூசைகள் தான் முற்பிறவிகள், மறுபிறவிகள், இப்பிறவியின் நாள் கோள், மீன், ஊழ், விதி;......நிலைகள்...... பற்றிய நுட்ப திட்ப ஒட்பப் பேருண்மைகளையெல்லாம் அநுபவப்பூர்வமாக விளக்குபவையாக இருக்கின்றன! இருக்கின்றன! இருக்கின்றன! எனவே தான், மெய்யான இந்து மதத்தின் முழு முதற்கடவுளான சிவபெருமான் சுடுகாட்டிலே திரு நடனம் ஆடுவதாகக் கூறுகின்றது. சுடலையாண்டி, சுடலையாண்டிச்சி, சுடலை ஈசுவரன், ஈசுவரி, சுடலைக்காரன், சுடலைக்காரி, சுடலைமோகினி, இடாகினி, இயக்கி, பேச்சி, சண்டி, சாமுண்டி, கொற்றவை, காடுகிழான், பத்திரகாளி, காளி மாரி, அங்காள பரமேசுவரி, பகவதி.........போன்ற அனைத்து வகையான தேவதைகளும், தேவியர்களும் முறைப்படுத்தப்பட்டுள்ளார்கள், வகைப்படுத்தப்பட்டுளார்கள் அதாவது, மேற்படி சுடுகாட்டுக் கடவுள்களும், தேவியர்களும், தேவதைகளும், தேவர்களும்... மெய்யான இந்து மதத்தின் மூலவர்களாகவும் காவலர்களாகவும், ஆட்சிச் சத்திகளாகவும் படைக்கப்பட்டுள்ளார்கள் அதாவது அமாவாசை தோறும் அந்தந்த ஊர் மக்கள் அந்தந்த ஊரிலுள்ள மேற்படி பதினெட்டு (18) வகைக் காடுகளிலும் தங்கள் தங்களுக்குரிய காடுகளுக்குச் சென்று வழிபாடுகளைச் செய்து அருட்பயன்களையடைய வேண்டுமென்பது தான் மெய்யான இந்து மதத்தின் தத்துவமும், சித்தாந்தமும். இம்மாபெரும் தத்துவத்தையும், சித்தாந்தத்தையும் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியர்கள் கெடுத்தும், தடுத்தும், அருட்பயன் பெறலைச் சிதைத்துச் சீரழித்து விட்டார்கள். எனவே தான் மெய்யான இந்துமதம் மிக எளிதாக மறக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் பொய்யான ஹிந்து மதத்தை வென்று, மெய்யான இந்து மதத்தை மறு மலர்ச்சியும், வளர்ச்சியும் ஆட்சிச் செழுச்சியும் அடையுமாறு செய்ய வேண்டும் என்றால் மெய்யான இந்துமதத்தின் அடிப்படையான அமாவாசை விரதநாளில் செய்யப்படும் பதினெட்டு வகைக்காடுகளில் பூசை அதாவது குறிப்பாக சுடுகாட்டிலும் செய்யப்படுகின்ற பூசை அனைத்துமக்களாலும் புரிந்து விரும்பி நம்பி மேற்றிச் செயல்படக்கப்பட வேண்டிய ஒன்றாக ஆக்கப்பட வேண்டும் அதாவது, அமாவாசை விரதப் பூசைகள் எல்லா ஊர்களிலும் உள்ள சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும் சிறப்பாகச் செய்யப்படக்கூடிய சூழ்நிலையும், பொற்காலமும் உருவாக்கப்படுவதன் மூலம்தான் மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிப் பணி வெற்றி பெறும்.

சுடுகாட்டையும், புதைகாட்டையும் பார்த்து மக்கள் அச்சமும், கூச்சமும் ஆச்சரியமும் மானசரியமும் அடைய ஆரிசிட்டுவிட்ட காரணத்தினால்தான் பதினெண் சித்தர்கள் உருவாக்கிய மெய்யாப்ச இந்துமதப்படி அருளை அநுபவப்பொருளாக அடையக்கூடிய சுடுகாட்டுப்பூசைகளும் புதைகாட்டுப்பூசைகளும் தடைபட்டு விட்டன! தடைபட்டு விட்டன! தடைபட்டு விட்டன! ஆனால் புதைகாட்டுப் பூசையை நிறுத்திய புத்தமதமும், கிறித்துவ மதமும், இசுலாமிய மதமும், உலகம் தழுவிய கொழுமையான எழுச்சிமிக்க செழிச்சியடைந்து வளர்ச்சியடைந்துள்ளன. இதனைப் புரிந்தாவது மெய்யான இந்து மதத்தின் மறுமலர்ச்சிப் பணி என்பது அல்லது நமது நாட்டு மக்கள் மெய்யான ஹிந்து மதத்திலிருந்து விடுபட்டு அருளை அநுபவப் பொருளாக அடைவதற்குரிய வழி எல்லா ஊர்களிலும், அமாவாசை விரத நாட்களில் சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும் பூசை நடக்குமாறு செய்வதுதான்

குறிப்பு;- எனவே உடனடியாக மக்களிடையில் சுடுகாட்டின் மேலும் புதைகாட்டின் மேலும் உள்ள அச்ச கூச்ச ஆச்சரிய மாச்சரிய உணர்வுகளைத் தடுக்கவும் அகற்றவும் முற்பட வேண்டும்! முற்பட வேண்டும்! முற்படவேண்டும்!

(தொடரும்)

மாண்டாய்; நீ பாச உணர்வின் எல்லை; உனக்கேற்பட்டது போல் வேறுயாருக்கும் வாழ்க்கையில் போராட்டங்களும் கவலைகளும் ஏற்பட வேண்டாம்; நீ நெஞ்சத்தாலும் பெருவீரன்; செயலாலும்பெரு வீரன்; உன்னை மதிக்கிறேன் வணங்குகிறேன், வீரமரணம் பெற்ற உனக்குத் தேவலோக இன்பங்கள் நிறைய கிடைக்கட்டும். நீ என்றென்றும் அமரனாக வாழ்வாயாக உன் மகன்களுக்கும் உன்போல் தேவலோக பதவிகள் கிடைக்கட்டும். என் தந்தை என்னுடைய பிரிவைத்தாங்க முடியாமல் மாண்டார். நீயோ உன்மகன்கள் இரண்டு பேர் மாண்டும் மனவலிமையோடு போரிட்டாய் உன்னை எப்படிப்புகழ்வ தென்றே எனக்குத் தெரியவில்லை. நீயே அரசர்க்கரசனாவாய்! மன்னர்க்கு மன்னனாவாய்! பெரு வீரம் படைத்த உன் மருமகன் என்று கூறிக்கொள்வதில் பெருமைப் படுகிறேன். உன்னை வண்ண ஓவியமாகவும், வடிவழகு மிக்க சிலையாகவும் நானே படைக்கிறேன். அவை சூரிய குலத்தின் வழிபாட்டிற்கு உகந்தவையாக என்றென்றும் இருக்கும். சிறந்த அரசியலறிவும் நீதியறிவும், அறநூல் தேர்ச்சியும் உயர்ந்த சிவபக்தியும் மிக்க நீயே இனிமேல் எங்கள் குலதெய்வமாவாய் நீயும உன் துணைவி வண்டமர்குழலியும் ஒருங்கமர்ந்திருக்கும் ''அரசவை ஓவியம்'' (அரியாசன ஓவியம் என்ற பாடவேறுபாடு உண்டு) நாங்கள் வணங்கும் சிவனும் பார்வதியும் திருக்கயிலையில் அமர்ந்திருக்கும் காட்சியின் வண்ண ஓவியமாகவே திகழ்கின்றது. உங்களிருவரை -யும் காண்பார் கைதொழாமல் இருக்க மாட்டார்கள். உங்களை என் மாமன், மாமி யாக கூறிக்கொள்வதில் மிகவும் பெருமைப் படுகிறேன்.........'' என்றெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து கூறியதால்தான் தன் தந்தையையும் தாயையும் இழந்து வருந்திய சீதை, இராமனோடு மகிழ்ச்சியாக இருந்தாள். அதாவது இராமன் தன் தந்தையைக் கொன்றும், தன் தாயின் சாவுக்குக் காரணமாக இருந்தும் அவன் மீது வெறுப்பு வராமல் அவனோடு இனிய இல்லறம் நடத்தி கருவுற்றாள் என்று சித்தர் இராமாயணத்தில் இராமன் இராவணேசுவரனைப் பற்றியும், வண்டமர் குழலியைப்பற்றியும், போற்றிப் புகழ்ந்த கருத்துக்களையும், அவர்களைத் தமது குலதெய்வமாகவே ஏற்றுக் கொண்ட செய்தியும், பலவாறு இலக்கியச் சுவைபட பல இடங்களிலும் பலர் வாயிலாகவும் விளக்கப் படுகின்றன,

சீதை அசோக வனத்தில் அழுதுபுலம்பி அரற்றிக் கொண்டு இருக்கவில்லை. சீதை மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தாள். இலங்கை மாநகரிலேயே குளிர்ச்சியும் வசதிமிக்க கட்டிடங்களும், அழகு மிக்க நீரூற்றுக்களும், செய்குன்றுகளும், தடாகங் -களும் கனிமலர்ச் சோலையும் மிகுந்த பகுதி அசோகவனம் தான் இந்த அசோக வனத்தில் பளிங்கு மாளிகைகளிலும், பனி நீர்த் தடாகங்களிலும், பழங்கள் மிகு சோலைகளிலும் மலர்கள் மிகுந்த பூங்காக்களிலுமே சீதை மகிழ்ச்சியாக உலா வந்தாள். அவளுக்கு துணையாக அவளுடைய சிற்றப்பா வீடணனின் மகள் திரிசடை இருந்தாள்.
இராவணன் திரிசடையிடம் சீதை அவளுடைய அக்காள் என்பதை கூறி அந்த இரகசியத்தைக் கடைசிவரை காப்பாற்றுமாறு உறுதிமொழி பெற்றிருந்தான். எனவே தான், திரிசடை தன்னுடைய அக்காளின் நினைவால்தான் தனது பெரியப்பா தன்னை வளர்ப்பு மகளாக அன்போடு வளர்த்தார் என்பதை உணர்ந்து செயல்பட்டாள். தன் அக்கள் சீதையை பிறந்தவுடனேயே தந்தப் பெட்டியில் வைத்துக் கடலுல் விட்ட செய்தியைத் தனது பெரியப்பாவும் பெரியம்மாவும் எத்தனை யோ ஆயிரமாயிரம் முறை வாய்விட்டுக் கூறிப் புலம்பியதைக் கேட்டவள் திரிசடை என்பதால் தன்னுடைய பெரியப்பாவிற்கும், பெரியம்மாவிற்கும் சீதைமேல் எல்லையில்லாத அன்பு இருப்பதை உணர்ந்து தானும் சீதையின் மீது எல்லையில்லாத அன்பைப் பொழிந்தாள். அதனால் சீதைக்கும் திரிசடைக்கும் இயற்கையாக இருந்த குருதிப்பாசம் அக்காள் தங்கை என்ற இயற்கையுணர்வு மேலும் மேலும் வளர்ச்சியுற்று வலிமை பெற்றுட்டது. எனவே சீதை சனகன் மாளிகையிலும், தசரதன் அரண்மனையிலும் வாழ்ந்த வாழ்வை விட மிகுந்த மகிழ்ச்சியும் அமைதியும் உடைய வாழ்வைத்தான் வாழ்ந்தாள். அவளுக்குத் தன் கணவனைப் பிரிந்திருக்கின்றோமே என்ற வருத்தம் இருந்தபோதிலும் தன் தந்தை இராவணேசுவரன் தன்னுடைய அத்தை சூர்ப்பனகையின் கோபம் தணிந்தவுடன் தன் கணவன் இராமனை இலங்கைக்கு அழைத்து வந்து தங்கள் இருவருக்கும் விண்ணவரும மண்ண வரும வியக்கும் வண்ணம் விழாச் செய்து தானே நேரில் அயோத்திக்கு அழைத்துச்சென்று தன் கணவனின் முடிசூட்டு விழாவைச் சிறப்பாக நிகழ்த்தித் தருவதாகவும் வாக்களித்திருந்தால் கணவனைப் பிரிந்திருந்த வருத்தத்தைப் பெரிது படுத்தாமல் வாழ்ந்தாள். என்று சித்தர் இராமாயணம் சீதையைப் பற்றிய புதிய புரட்சிகரமான செய்தியைத் தருகின்றது. (தொடரும்)